மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தார்ச் சாலைகளாக அமைக்க வேண்டுமென்ற நிலையிலேதான் இருக்கிறது. இப்பொழுது ஏறத்தாழ 9,000 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைக்குச் சொந்தமாக வைத்துக் கொள்வதா, அல்லது உள்ளாட்சித் துறைக்குக் கொடுத்து விடுவதா என்ற ஒரு பிரச்சினை வந்தது. முதல் அமைச்சருடைய தலைமையிலே ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, அந்தக் கூட்டத்திலே விவாதிக்கிற பொழுது, இந்தப் பொருளும் அங்கே வந்தது. அதிலே நெடுஞ் சாலைத் துறைக்குக் குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரத்தையும் நம்முடைய உள்ளாட்சித் துறைக்குக் குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரத்தையும் இப்பொழுது ஒதுக்கி இருக்கிறார்கள். எனவே, அந்த, அந்தத் துறை நிதி நிலைக்கேற்ப அந்த பிளாக் டாப் செய்கின்ற வேலையை இப்பொழுது செய்து வருகிறது.

பொம்மியம்பட்டியில் சத்துணவுக் கூடம்.

750—(*வினா எண் 5171) திரு. செ. செம்மலை: மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் பொம்மியம்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் ஒரு சத்துணவு மையம் துவக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: இது பற்றிய கருத்துரு ஏதுவும் அரசால் பெறப்படவில்லை. பெறப்பட்டால் அரசு அதனை விதிகளுக்குட்பட்டு பரிசீலனை செய்யும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நடவடிக்கை இப்போதைக்கு இல்லையென்று சொன்னாலும், அந்த இடத்திலே ஒரு சத்துணவுக் கூடம் அமைக்க வேண்டுமென்ற அவசியத்தையும் தேவையையும் வலியுறுத்தி சேலம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு முறையான முன்மொழிவை அனுப்பியிருக்கிறார்கள். அந்த முன்மொழிவு அரசுக்குக் கிடைக்கப் பெற்றவுடன் அந்த இடத்தில் சத்துணவு கூடம் அமைப்பதற்கான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சத்துணவுக் கூடம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், குறைந்தது 70 குழந்தைகள் இருக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் பக்கத்தில் இருக்கிற சத்துணவுக் கூடங்களுக்குச் செல்வதற்கு வெகுதூரம் இருக்கிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் உணர்ந்து அரசுக்கு அறிவிப்பாரானால் அங்கே ஒரு புதிய சத்துணவுக் கூடம் ஆரம்பிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்யும்.